இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை-34.

பெறுநர்

1. அனைத்து இணை ஆணையர்கள்
2. அனைத்து இணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
3. அனைத்து துணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
4. அனைத்து உதவி ஆணையர்கள்
5. அனைத்து உதவி ஆணையர்/ செயல் அலுவலர்கள்

சுற்றறிக்கை எண்.31154/2010/எம்.3/ நாள் 06.10.2021

அய்யா/அம்மையீர்,

பொருள்: அறநிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கு கேட்பு, வசூல், நிலுவை விவரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்தல் அறிவுரை வழங்கியது – தொடர்பாக.

பார்வை: 1) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.31154/10/ எம்.3/ நாள.07.08.2021
2) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.31154/10/ எம்.3/ நாள் 19.08.2021
3) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.31154/10/ எம்.3/ நாள் 31.08.2021.
4) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.31154/10/ எம்.3/ நாள் 15.09.2021. 30.09.2021

****

பார்வை 4-ல் கண்ட சுற்றறிக்கையில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களில் குத்தகைதாரர்/ வாடகைதாரர்களால் செலுத்தப்படும் குத்தகை/ வாடகை தொகைக்கு அச்சடித்த இரசீது வழங்கும் முறையினை ரத்து செய்து 15.10.2021 முதல் இணையதள வழியில் அந்தந்த அறநிறுவனங்களின் நிர்வாகத்திற்கு குத்தகை / வாடகையினை செலுத்திட

Verified RealEstate ™

நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அனைத்து அறநிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கான கேட்பு, வசூல், நிலுவை குறித்த விவரங்களை விடுதல் இல்லாமல், 10.10.2021–க்குள் தவறாமல் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டுமெனவும், மேலும் இது தொடர்பாக இவ்வலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட சான்றினை பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், இந்த பணியில் பெரும்பான்மையான அலுவலர்கள் போதிய முன்னேற்றம் காட்டவில்லை. மேலும், நிறைவுச்சான்று மிகச்சில அலுவலர்களால் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால், கேட்பு வசூல் நிலுவை விவரங்கள் முழுமையாக இணைய வழியில் நடைமுறைப்படுத்துவது தாமதமாகிறது.

அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கு எழுப்பப்படும் கேட்பினை முறையாக வசூல் செய்யவும், ஒளிவுமறைவு அற்ற வகையில் அமையும் வண்ணம் 08.10.2021 அன்று மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் திருக்கோயில் கேட்பு வசூல் நிலுவை விவரம் கணினி மயமாக்கப்பட்டுள்ளதை துவக்கி வைக்கப்பட உள்ளது. இதன் மூலம் அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்களுக்கு குத்தகைதாரர்/ வாடகைதாரர்களால் செலுத்த வேண்டிய குத்தகை/ வாடகை தொகையினை இணையதள வழியில் செலுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அறநிறுவனங்களில் குத்தகைதாரர் / வாடகைதாரர்களால் செலுத்தப்படும் குத்தகை/ வாடகை தொகைக்கு அச்சடித்த இரசீது வழங்கும் முறையினை 31.10.2021 முதல் ரத்து செய்து 01.11.2021 முதல் இணையத்தள வழியில் அந்தந்த அறநிறுவனங்களின் நிர்வாகத்திற்கு குத்தகை / வாடகையினை செலுத்திட கீழ்க்கண்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

Verified RealEstate

- 01.11.2011 முதல் அறநிறுவனங்களுக்கு குத்தகைதாரர்/ வாடகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகை/வாடகை தொகையினை கண்டிப்பாக இணையதள வழியில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும். இவ்விவரம் குத்தகைதாரர்/வாடகைதாரர் அறியும் வண்ணம் அலுவலக "அறிவிப்பு பலகையில்" விவர அறிக்கை ஒன்று வெளியிடப்பட வேண்டும். மேலும் வாடகை / குத்தகைத் தொகையினை அந்தந்த திருக்கோயில் நிர்வாகத்திற்கு பிரதிமாதம் 10-ம் தேதிக்குள் செலுத்தப்ட வேண்டுமென என்ற விபரமும் விளம்பர பலகையில் அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.
- சிறிய அளவிலானத் தொகை மற்றும் கணினி மூலம் வாடகை செலுத்த இயலாத வாடகைதாரர் / குத்தகைதாரர்கள் வழக்கம்-போல் திருக்கோயில் அலுவலகத்தில் தொகையினை செலுத்த வரும்போது அத்தொகையை பெற்றுக் கொண்டதற்கு திருக்கோயில் நிர்வாகத்தால் **கணினி மூலம் மட்டுமே** ரசீது வழங்கப்பட வேண்டும்,
- அதற்கான கணினி ரசீது மாதிரிப்படிவம் இத்துடன் இணைத்து அனுப்பப்ப்படுகிறது.
- அறநிறுவனங்களுக்குச் சொந்தமான Non-DCB இனங்களுக்கான தொகையினை கேட்பு வசூல் நிலுவை விவரங்களுடன் பதிவேற்றம் செய்யக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.
- கேட்பு வசூல் நிலுவை குறித்த விவரங்களை விடுதல் இல்லாமல் கணினியில் முழுமையாக பதிவேற்றம் செய்து, அதன் பின்னர் இவ்விவரத்திற்கு சார்நிலை அலுவலர்களால் "நிறைவுச் சான்று" வரும் 12.10.2021-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- திருக்கோயில்களின் அசையா சொத்துக்கள் மற்றும் கேட்பு-வசூல்-நிலுவை (DCB) விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடும் பணிக்கு தேவையான கணினி, பிரிண்டர், ஸ்கேனர் ஆகியவற்றினை நிதிவசதி இல்லாத திருக்கோயில்களுக்கு நிதிவசதி உள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து பெற்று வழங்கிட ஏற்கனவே இவ்வலுவலக ந.க.எண்.61387 / 2021 எம்3 நாள் 26.08.2021 மூலம் வழிகாட்டுதல்கள் வழங்கி உத்தரவிடப்-பட்டுள்ளது. அதனை பின்பற்றி செயல்படுமாறு சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்விவரத்தை தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Verified RedEstate™

எனவே, தவறாமல் அனைத்து அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கான கேட்பு வசூல் நிலுவை விவரங்களை விடுதல் இல்லாமல் கணினியில் பதிவேற்றம் செய்து இப்பணியினை துரிதப்படுத்தி முடிக்கப்பட வேண்டுமென மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கை விவரத்தை தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து அறநிறுவனங்களின் நிர்வாகிகள்/ செயல் அலுவலர்களுக்கு தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இச்சுற்றறிக்-கையினை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஓம்./ ஜெ. குமரகுருபரன்
ஆணையர்.

/உ.ந.உ.ப/

6.10.2021
கண்காணிப்பாளர்

இணைப்பு

கணினி ரசீது மாதிரி படிவம்

Verified RealEstate™

Arulmigu Dhandayuthapaniswamy Temple, Palani [TM032203]
Adivaram - 624601

Original Receipt

Fasli Year : 1431

Form No. 5

Receipt No. : R3220321100500002, DCB No. : DL3220320210002, M.R.No. : 3
Name (Thiru / Tmt. / Selvi) : Shankari, F/O a (34, theru 3, idam 1)
Purpose : Demand Collection: Land - Wet
Mobile Number :

Landline No.:
Date : 05/10/2021

Details	Qty. in KG [Paddy]	Other Charges (₹)	Equivalent Amount (₹)
Arrear Qty. Penalty Amount	3	0.00	240.00 0.00
Total	3	0.00	240.00

(Rupees Two Hundred and Fourty Only)

Remitters Cashier Joint Commissioner / Executive Officer

Arulmigu Dhandayuthapaniswamy Temple, Palani [TM032203]
Adivaram - 624601

Duplicate Receipt

Fasli Year1431

Form No. 5

Receipt No. : R3220321100500002, DCB No. : DL3220320210002, M.R.No. : 3
Name (Thiru / Tmt. / Selvi) : Shankari, F/O a (34, theru 3, idam 1)
Purpose : Demand Collection: Land - Wet
Mobile Number :

Landline No.:
Date : 05/10/2021

Details	Qty. in KG [Paddy]	Other Charges (₹)	Equivalent Amount (₹)
Arrear Qty. Penalty Amount	3	0.00	240.00 0.00
Total	3	0.00	240.00

(Rupees Two Hundred and Fourty Only)

Remitters Cashier Joint Commissioner / Executive Officer

Verified RealEstate™

**This is a Computer generated acknowledgement and does not require signature
https://hrce.tn.gov.in/democopp/hrcehome/index.php